V

# காலாண்டு பொதுத்தேர்வு - 2019

## ஒன்பதாம் வகுப்பு

பதிவு எண் : | | | | | | |

நேரம்: 2.30 மணி

## தமிழ் முதல் தாள்

மதிப்பெண்கள்: 100

### பகுதி - I (மதிப்பெண்கள் 14)

**பலவுள் தெரிக:** 14 x 1 = 14

1. இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று கூறியவர்
அ) கால்டுவெல் ஆ) ச.அகத்தியலிங்கம் இ) மாக்ஸ் முல்லர் ஈ) பிரான்சிஸ் எல்லிஸ்
2. தமிழ்விடுதூது ________ என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
3. ஈரோடு தமிழன்பன் எழுதிய நூல் ________.
அ) தமிழ்விடு தூது அ) திருக்குறள் இ) தமிழோவியம் ஈ) மணிமேகலை
4. அலைகளைக் கொண்ட உப்புநீர்ப் பெரும்பரப்பு ________.
அ) ஆறு ஆ) ஏரி இ) கண்மாய் ஈ) கடல்
5. 'மிசை' - என்பதன் எதிர்ச்சொல் என்ன?
அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை
6. <u>மல்லல்</u> மூதூர் வயவேந்தே - கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?
அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய
7. பொருந்தாத இணை எது?
அ) ஏறுகோள் - எருதுகட்டி ஆ) திருவாரூர் - கரிக்கையூர்
இ) ஆதிச்சநல்லூர் - அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் - பட்டிமண்டபம்
8. 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று சேக்கிழாரைப் பாராட்டியவர் ________.
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்
9. கதை அடிப்படையில் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சி என அழைக்கப்படும் நூல் ________.
அ) மணிமேகலை ஆ) சீவகசிந்தாமணி இ) பெரியபுராணம் ஈ) வளையாபதி

***பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (10,11,12,13,14) விடை தருக:***

'எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே...'

10. மேலுள்ள பாடலடிகள் இடம்பெற்ற நூல் எது?
அ) தமிழ்விடுதூது ஆ) பட்டமரம் இ) புறநானூறு ஈ) தமிழோவியம்
11. பாடலில் அமைந்துள்ள மோனைச் சொற்கள்
அ) எத்தனை, சமயங்கள் ஆ) ஏந்தி, தாயெனவே
இ) சித்தர், சிந்தனை ஈ) சித்தர், மரபிலே
12. 'எத்தனை எத்தனை' - என்பதன் இலக்கணக்குறிப்பு
அ) அடுக்குத்தொடர் ஆ) இரட்டைக்கிளவி இ) உம்மைத்தொகை ஈ) எண்ணும்மை
13. பாடலில் அமைந்துள்ள எதுகைச் சொற்கள்
அ) எத்தனை, ஏந்தி ஆ) எத்தனை, சித்தர் இ) சித்தர், சிந்தனை ஈ) ஏந்தி, சித்தர்
14. 'தீது' - என்ற சொல்லின் பொருள்
அ) தீமை ஆ) நன்மை இ) பயன் ஈ) சிறப்பு

V

## பகுதி - II (மதிப்பெண்கள் 20)

### பிரிவு - 1

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** 5 x 2 = 10

15. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
16. தென் திராவிட மொழிகள் நான்கினை எழுதுக.
17. 'கூவல்' என்று அழைக்கப்படுவது எது?
18. நீர்நிலைகளுக்கு வழங்கப்படும் பல்வேறு பெயர்களை எழுதுக.
19. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும்வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
20. விடைக்கேற்ற வினா அமைக்க:
    அ) தமிழின் மிகப்பழமையான இலக்கண நூல் தொல்காப்பியம்
    ஆ) முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான் பென்னி குவிக்
21. மாட்டுப் பொங்கல் - குறிப்பு எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்தனுக்கு இரண்டு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** 5 x 2 = 10

*(28 ஆவது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க)*

22. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.
23. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
24. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே - குறிப்பு தருக.
25. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?
26. படிமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
27. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக:

| | |
|---|---|
| பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று | ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல் |
| தத்தம் கருமமே கட்டளைக்கல் | அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும் |
| அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் | சுடாத மண் கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல |

28. 'விடல்' என முடியும் திருக்குறளை எழுதுக.

## பகுதி - III (மதிப்பெண்கள் 50)

### பிரிவு - 2

**எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க;** 3 x 5 = 15

29. திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
30. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
31. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.
32. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
33. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.

### பிரிவு - 2

**எவையேனும் மூன்றனுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** 3 x 5 = 15

34. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய் - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.
35. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
36. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?
37. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக.
38. தமிழ்விடுதூது - நூற்குறிப்பு எழுதுக.

## பிரிவு - 3

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:** 4 x 5 = 20

39. பொருத்துக:


| | |
|---|---|
| i) ஈரோடு தமிழன்பன் | அ) குடபுலவியனார் |
| ii) கவிஞர் தமிழ்ஒளி | ஆ) சீத்தலைச் சாத்தனார் |
| iii) சேக்கிழார் | இ) பட்ட மரம் |
| iv) புறநானூறு | ஈ) பெரியபுராணம் |
| v) மணிமேகலை | உ) தமிழோவியம் |

40. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:

வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப் படுத்தப்படுபவை மாடுகள். முல்லை மற்றும் மருத நிலங்களில் கால் கொண்டு தமிழர்தம் வாழ்வோடு பின்னிப் பிணைந்து பண்பாடாகியுள்ளது ஏறுதழுவுதல். ஏறுதழுவுதல் தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு; இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு. இது, நூற்றாண்டுகள் பல கடந்தும் தமிழர்தம் அடையாளமாகவே நிறுவப்பட்டிருக்கிறது.

i) மேலுள்ள உரைப்பத்தி எதைப்பற்றி பேசுகிறது?
ii) பத்தியில் இடம்பெற்றுள்ள பெயர்ச் சொற்களை எழுதுக.
iii) பத்தியில் அமைந்துள்ள சுட்டுச் சொல் எது?
iv) பத்தியில் இடம்பெற்றுள்ள பன்மைச் சொற்களை எழுதுக.
v) பத்தியைப் படித்து பொருத்தமான தலைப்பு இடுக.

41. படம் உணர்த்தும் கருத்தை நயமாக ஐந்து தொடர்களில் குறிப்பிடுக.



42. 'தித்திக்கும்' எனத் தொடங்கும் தமிழ்விடு தூது மனப்பாடப் பகுதியை எழுதுக.

## பகுதி - IV (மதிப்பெண்கள் 16)

**விரிவான விடையளிக்க:** 2 x 8 = 16

43. அ) தூது அனுப்பத் தமிழே சிறந்தது - தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

*(அல்லது)*

ஆ) பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.

44. அ) திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.

*(அல்லது)*

ஆ) ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.

******